# மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்ககம்

# மக்கள் சாசனம்

தனியார் பள்ளிகள் தரமான கல்வி அளிக்கம் பொருட்டு அப்பள்ளிகளில் கற்றல் மற்றும் கற்பித்தல் செயல்பாட்டுக்குத் தகுதிவாய்ந்த ஆசிரியர்களை நியமனம் செய்வதையும், தேவையான அடிப்படை உட்கட்மைப்பு வசதிகளை ஏற்படுத்துதையும் இடைவிடாத நடவடிக்கைகள் வாயிலாக உறுதி செய்யப்படுகிறது. குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டயாக் கல்வி உரிமைச் சட்டம், 2009 செயல்படுத்துவதை மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்ககம் உறுதி செய்கிறது.

**மாணாக்கர் சேர்க்கை**

மெட்ரிகுலேசன் பள்ளிகளில் மாணாக்கர்கள் கீழ்க்குறிப்பிட்டுள்ள நடைமுறைகளின்படி சேர்க்கை செய்யப்படுகின்றனர்.

1. நேரடி சேர்க்கை
2. மாற்றுச்சான்றிதழ் மூலம் சேர்க்கை

## நேரடி சேர்க்கை மற்றும் மாற்றுச் சான்றிதழ் மூலம் சேர்க்கை

| | |
|---|---|
| வகுப்புகள் | எல்.கே.ஜி முதல் 12 ஆம் வகுப்புவரை<br>எல்.கே.ஜி முதல் 10 ஆம் வகுப்புவரை<br>6 முதல் 10 ஆம் வகுப்பு வரை<br>6 முதல் 12 ஆம் வகுப்பு வரை |
| சேர்க்கை காலம் | பள்ளி துவங்கிய நாள் முதல் ஜுலை 31 ஆம் தேதி வரை (அல்லது) அரசால் காலநீட்டிப்பு வழங்கப்பட்டால் அதுவரை |
| தொடர்பு கொள்ளவேண்டிய அலுவலர் | சம்மந்தப்பட்ட பள்ளி முதல்வர் |
| சேர்க்கைக்கான வயது மற்றும் வயது தளர்வு வழங்குதல் | முதல் வகுப்பு சேர்க்கைக்கு ஜுலை 31 அன்று ஐந்து வயது பூர்த்தியடைந்திருக்க வேண்டும். அடுத்தடுத்த வகுப்புகளுக்கு இதே நடைமுறையின்படி வயது கணக்கீடு செய்யப்பட வேண்டும். உதாரணமாக பத்து வயது முடிந்தவர்கள் ஆறாம் வகுப்பு சேர்க்கைக்கு தகுதியானவர் ஆவர். முதல் வகுப்பு நீங்கலாக ஏனைய வகுப்புகளுக்கு ஆறு மாதங்கள் வரை மெட்ரிகுலேசன் பள்ளிகள் ஆய்வாளரால் வயது தளர்வாணை வழங்கப்படும். ஆறு மாதங்களுக்கு மேல் மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநரால் வயது தளர்வாளை வழங்கப்படும். |
| தகுதி மற்றும் முன்னிலைப்படுத்த வேண்டிய விவரங்கள் | அங்கீகரிக்கப்பட்ட பள்ளியில் பயின்று தொடக்க / நடுநிலை கல்வி முடித்து தேர்ச்சி பெற்றவர்களை மாற்றுச் சான்றிதழின் அடிப்படையில் மெட்ரிகுலேசன்/ மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளிகளில் முறையே 6 மற்றும் 9 ஆம் வகுப்பில் சேர்க்கை செய்யலாம். பத்தாம் வகுப்பு மதிப்பெண் பட்டியலின் அடிப்படையில் மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளிகளில் 11 ஆம் வகுப்பு சேர்க்கை செய்யலாம் |

அரசு மற்றும் அரசு சார் நிறுவனங்களில் பணிபுரியும் பெற்றோர் மாறுதல் பெறும் நிகழ்வுகளில் அவர்தம் குழந்தைகளை